# நபிவழியே தக்லீத்

தொகுத்தவர்:

மௌலவி அல்ஹாஜ் அல்ஹாபிழ்
S. M. அப்துல்காதர் ஃபாஸி
(முத்து வாப்பா)
கலீஃபத்துஷ்ஷாதுலி
காயல்பட்டணம்

www.EravurSYF.com

வெளியீடு:
ஜாவியா அரபிக் கல்லூரி
ஜாவியா தெரு
காயல்பட்டணம் - 628 204

ஹதியா 1-00

www.EravurSYF.com

## முன்னுரை

அன்புமிக்க சகோதரர்களே!

அஸ்ஸலாமு அலைக்கும்

உங்கள் கையில் மலரும் இந்நூல், தக்லீத் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்று உண்மையாகவே ஆர்வம் உள்ளவர்களுக்கு, தெளிவாக விளங்கக் கூடிய சிறந்த நூல்.

சோதனைகள் நிறைந்த காலம் இது. இளைஞர்களையும், பாமர மக்களையும் மனம் போன போக்கில் நடக்கத் தூண்டும் ஒரு இயக்கம், இஸ்லாத்தின் பண்பாடுகளுக்கு ஒரு சவாலாக உள்ளது. அவர்களின் உண்மை நோக்கம், மதுஹபுகளைப் பின்பற்றுபவர்களுக் கிடையில் சண்டையைத் தூண்டுவதே தவிர வேறில்லை.

நான்கு மதுஹபுகளும் வகுத்த சட்ட திட்டங்கள், நாயகம் (ஸல்) அவர்களின் முழு வாழ்க்கையின் பிரதிபலிப்பாகவே அமைந்துள்ளன. மதுஹபு மக்களிடையே ஒரு இணைப்பு. இதை உணராத ஒரு வழிகெட்ட இயக்கம் தவறான நச்சுக் கருத்துக்களை மக்களிடம் பரப்பி வருகிறது.

வழிகெட்ட இந்தக் கூட்டத்தினர் குர்ஆன், ஹதீதுகளுக்கு சஹாபாக்கள், தாபியீன்கள், மற்றும் நம்பிக்கைக்குரிய அறிஞர்கள் கூறிய கருத்துக்களை உதாசீனம் செய்து, தன் மனம் விரும்பியபடி, தங்கள் கொள்கைகளை திணிக்கக் கூடிய தவறான கருத்துக்களைக் கூறி தாங்களும் குழம்பி, பொதுமக்களையும் குழப்பி வருகிறார்கள். இது மனசாட்சிக்குப் புறம்பான பிடிவாதத்தைச் சேர்ந்ததே.

அவர்களுக்கு மறுப்புக் கூறுவது எங்கள் நோக்கம் அல்ல. ஏனெனில் அவர்களிடம் எத்தனை ஆதாரங்களை எடுத்துக் கூறினாலும், அவற்றை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் இல்லாதவர்கள்.

கண்ணியமிக்க, மதுஹபுகளுக்குரிய இமாம்கள் அமைத்து தந்த, நாயகம் (ஸல்) அவர்களின் வழிமுறைகளைப் பல நூற்றுண்டுகளாகப் பின்பற்றி வரும் நம் சமுதாய மக்களுக்குச் சரியான விளக்கம் தரவேண்டும், வழிகெட்ட கூட்டத்தினரின் நச்சுக் கருத்துக்களுக்கு, பொதுமக்கள் மனதில் இடம் கொடுத்து விடாமல் மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்பது எங்களின் முக்கிய குறிக்கோள்.

ஆகவே சீரிய சிந்தனையுடனும், நேரிய நோக்குடனும் படிப்பவர்களுக்கு இந்நூல் சரியான, போதுமான விளக்கத்தை தரும். இன்ஷா அல்லாஹ்.

வஸ்ஸலாம்.

## நபியவர்களின் வழியே தக்லீத்

தற்போது ஒரு கூட்டத்தினர் நான்கு மதுஹபுகளையும், அவைகளை பின்பற்றுபவர்களையும் கடுமையாக மறுத்தும், வெறுத்தும் வருகின்றனர், அதற்கு அவர்கள் கூறும் காரணங்களாவன:

இஸ்லாம் - ஈமானுடைய சட்டதிட்டங்கள், குர்ஆன் ஹதீதுகளில் அமைந்து இருக்கின்றன. இவை இரண்டைத்தவிர மற்றவைகளை பின்பற்றுவது கூடாது, இஸ்லாத்திற்கு அப்பாற்பட்டது என்றுகூறி, குர்ஆனில்வரும் ''அல்யல்ம அக்மல்து' என்ற ஆயத்தை (5:3) ஆதாரமாகக் காட்டி., மதுஹபுகள், இமாம்களின் ஆய்வுகள், அவர்களின் சொல்லாக்கங்கள், செயல் திட்டங்கள் எங்கிருந்து வந்தன என்று வினு எழுப்புகின்றனர் மேலும் அவர்கள் வகுத்த செயல் திட்டங்கள் மார்க்கச் சட்டங்களைப் பின்பற்றுவது (தக்லீத் செய்வது) 'பித் அத்' என்ற மார்க்கத்திற்குப் புறம்பானது என்றும், மதுஹபுகளைப் பின்பற்றுபவர்களின் வணக்க வழிபாடுகள் ஏற்புடையதல்ல என்றும். தக்லீத் பற்றியும், மதுஹபுகளைப் பின்பற்றவது குறித்தும், குர்ஆன் ஹதீதுகளில் காணப்படவில்லை என்றும் எனவே அவ்வாறு பின்பற்றுவதை உங்களின் முதுகுபுறம் வீசியெறிந்து விட்டு குர்ஆன், ஹதீதுகளின்படி செயல்படுங்கள் என்றும் சொல்லி விதண்டா வாதம் புரிகின்றனர்.

அவர்களின் இக்கூற்றுக்கள் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போது சரிதானே என்று தோன்றலாம்.

ஆனுல் பல நூற்றுண்டுகளுக்கு முன்பே, மதிப்புக்குரிய இமாம்கள் **அல்குர்ஆன், ஹதீதுகளின் அடிப்படையில் தான்** மதுஹபுகளை உருவாக்கியுள்ளனர் என்பதை அறிந்திருந்தும் அவைகளை மறுத்து இந்த குழப்பவாதிகள் குர்ஆன், ஹதீதுகளுக்கு நாங்கள் கூறுவதே சரியான விளக்கம், அதன்படி அனைவரும் செயல்பட வேண்டும் என்றும் கூறி பிடிவாதம் செய்து, தாங்களும் குழம்பி, பொதுமக்களையும் குழப்பி வருகின்றனர். பிடிவாதத்திற்கு மருந்து இல்லை.

**அன்புக்குரியவர்களே சிந்தியுங்கள்!**

குர்ஆனில் எதையும் சொல்லாமல் விட்டு வைக்கவில்லை என்று அல்லாஹ் கூறுகிறான். (6:38)

www.EravurSYF.com



**ஹதீது:** அல்லாஹ்வை நெருங்கக்கூடிய எந்த விஷயத்தையும் நான் உங்களுக்கு ஏவாமல் விட்டு வைக்க வில்லை. அல்லாஹ்விடமிருந்து உங்களைத் தூரமாக்கக் கூடிய எந்த விஷயத்தையும் உங்களுக்கு நான் தடுக்காமல் விட்டு வைக்க வில்லை.

இந்த குர்ஆன், ஹதீதை அவர்களின் வாதத்திற்கு ஆதாரமாகக் காட்டும் குறைமதியாளர்கள், அவைகளின் விளக்கங்களை சரியாகப் புரிந்து கொள்ளாமல் குர்ஆன், ஹதீதுகளிலிருந்து மட்டுமே சட்டங்களை இயற்றி இருக்கலாமே என்று சிறுபிள்ளைத்தனமாக கேள்வி எழுப்புகிறார்கள்.

ஆனால், குர்ஆனில், சுத்தம், தொழுகை, ஹஜ்ஜு, ஜகாத் போன்ற வணக்கங்களின் விபரங்கள் பர்ளு தொழுகைகளின் எண்ணிக்கை, ஐவேளைத் தொழுகைகளின் நேரங்கள் பற்றி தெளிவாகக் கூறப்பட வில்லை. எனவே இவைகளுக்குரிய விளக்கங்களையும், குர்ஆனில் கூறப்பட்ட பொதுவாக உள்ள விஷயங்களுக்கும், நாயகம் (ஸல்) அவர்கள் தந்த விளக்கத்தையே நாம் பின்பற்ற வேண்டும்.

நாயகம் (ஸல்) அவர்கள் விளக்கம் தந்திருக்காவிட்டால் உம்மத்தில் யாரும் நேர்வழி பெற்றிருக்க முடியாது.

நாயகம் (ஸல்) அவர்கள் குர்ஆனில் உள்ள பொதுவான விஷயங்களுக்கு எவ்வாறு விளக்கம் தந்து தெளிவுபடுத்தினுர்களோ, அவ்வாறேதான் முரண்பாடாக தெரிகின்ற எத்தனையோ ஹதீதுகளுக்குச் சங்கைக்குரிய இமாம்கள் தெளிவான, விபரமான, விளக்கங்களை நமக்கு தந்துள்ளார்கள். அவ்வாறு அவர்கள் விளக்கம் தந்திருக்கவில்லை எனில் நம்மால் ஹதீதுகளின் கருத்தைத் தெரிந்து செயலில் கொண்டு வந்திருக்க முடியாது.

மேலும் அவர்கள் ஹஜரத் முஆத் இபுனு ஜபல் (ரலி) அவர்களின் சம்பவம் பற்றி, அபூதாவூத், திர்மீதீ, போன்ற கிதாபுகளில் வரக்கூடிய ரிவாயத்துகளையும் மறந்தவர்களாக இருக்கிருர்கள். அதனுல்தான், 'தக்லீத்' செய்வது நபி வழிக்கு முரணனது என்று அவர்கள் அறியாமையால் கூறித் திரிகிருர்கள் ஹஜரத் முஆத் இபுனு ஜபல் (ரலி) அவர்களை அண்ணல் நபி (ஸல்) அவர்கள், எமன் நாட்டிற்கு தூதராக அனுப்பும் பொழுது,

நாயகம் (ஸல்):- உங்களிடம் ஒரு வழக்கு வந்தால் அதற்கு எந்த அடிப்படையில் தீர்ப்பு வழங்குவீர்கள்?



முஆத் (ரலி):- குர்ஆனின் அடிப்படையில் தீர்ப்பு செய்வேன்.

நாயகம் (ஸல்):- குர்ஆனில் காண முடியவில்லை என்ருல்?

முஆத் (ரலி):- ஹதீதுகளின் அடிப்படையில் தீர்ப்பு செய்வேன்.

நாயகம் (ஸல்):- ஹதீதுகளிலும் பெற முடியவில்லை என்ருல்?

முஆத் (ரலி):- இஜ்தி ஹாதின் (ஆய்வின்) முடிவின்படி தீர்ப்பு வழங்குவேன்: என்னுடைய ஆய்வில் குறைவு செய்யமாட்டேன்.

இதை செவியுற்ற பெருமானுர் (ஸல்) அவர்கள், ஹஜரத் முஆத் (ரலி) அவர்களின் நெஞ்சைத் தட்டி ''தூதருடைய தூதருக்கு தூதர் பொருந்திக் கொள்ளக் கூடிய முறையில் கருத்தைச் சொல்வதற்கு துணை செய்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்'' என்று கூறினுர்கள்.

**இந்த சம்பவத்திலிருந்து குர்ஆன், ஹதீதுகளிலிருந்து மட்டும் சட்டங்களை விளங்க முடியாது என்பது தெரிகிறது.**

## இமாம்களின் நன் முயற்சி

**ஹதீது :-** மக்களில் மிகவும் மேன்மையானவர்கள் என் காலத்தவர்களே. பின்னர் அவர்களை அடுத்த காலத்தவர்கள், அதன் பின்னர் அவர்களை அடுத்த காலத்தவர்கள்.

நாயகம் (ஸல்) அவர்களால் புகழப்பட்டகாலத்தில் வாழ்ந்தவர்கள்தான் இமாம்கள் நால்வரும்.

**ஹதீது:** என்னிலிருந்து ஒரு வார்த்தையாயினும் (நீங்கள் செவியுற்றதை) மக்களுக்கு தப்லீக் செய்யுங்கள்.

**ஹதீது:** என்னுடைய சொல்லைக் கேட்டு பாடமிட்டு அதன்படி பேணி நடந்து அதனை மக்களுக்கு எடுத்துச் சொன்ன அடியானுக்கு அல்லாஹ் மகிழ்ச்சியை அளித்திடுவானுக.

ஷரீஅத்தினுடைய சட்ட திட்டங்களில் இமாம்களைப் பின்பற்றுவது, நபி (ஸல்) அவர்களின் வழிமுறைக்கு முரணனது அல்ல. ஏனெனில், இமாம்கள் அனைவரும் நாயகம் (ஸல்) அவர்களின் மேற்கூறிய ஹதீதுகளின் அடிப்படையில், நாயகம் (ஸல்) அவர்கள் பொதுவாகச் சொன்ன பொன் மொழிகளை

www.EravurSYF.com



விளக்கியும். சூசகமாகச் சொல்லியவைகளை விபரித்துத் தெளிவாக்கியும், பிற்காலத்தில் வரும் உம்மத்தார்கள் அமல் செய்வதிலே சிரமம் ஏற்படாமல் இருப்பதற்காக, தெளிவான சட்டங்களை வகுத்து அவைகளை பல பகுதிகளாக, பாடங்களாகத் தொகுத்துத் தந்துள்ளார்கள். அதனைச் செயல்படுத்துவதற்காகத் தங்களையே அர்ப்பணித்துக் கொண்ட தியாகச் செம்மல்களாகத் திகழ்ந்தார்கள்.

சில வேளைகளில் சொன்னவரை விடக் கேட்பவர் ஆய்வு செய்வதில் வல்லுனராக இருப்பார். அப்போது கேட்கப்பெற்ற ஹதீதிலிருந்து ஆய்வு செய்வார். ஏனெனில் ஹதீதை அறிவிக்கின்ற எத்தனையோ அறிவிப்பாளர்கள் அந்த ஹதீதிலுள்ள சட்ட நுணுக்கங்களை அறிந்தவர்களாக இருக்க மாட்டார்கள். அவ்வாருன அறிவிப்பாளர் தன்னைவிடச் சிறந்த விளக்கமுள்ளவர்களுக்கு ஹதீதை எடுத்துச் சொல்பவர்களாக இருந்தார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்தவைகள், சொல்லியவைகள், அனுமதித்த செயல்கள் அனைத்தையும் அன்னாரின் அன்பிற்குப் பாத்திரமான ஸஹாபாக்கள், தமது நெஞ்சகத்தில் பேணிப் பாதுகாத்து வைத்திருந்தனர். அவர்களில் பெரும்பாலோர் குர்ஆன் ஹதீதுகளிலிருந்து சட்டங்களை ஆய்வு செய்வதில் ஆற்றல் உடையவர்களாக இருந்தனர்.

அவர்கள் நபி (ஸல்) அவர்களின் நேரடிப்பார்வையில் இருந்து வந்ததாலும் நபி (ஸல்) அவர்களுக்குப் பின், ஜிஹாத் [மார்க்கப்போர்] இஷாஅத் [தீனைப் பரப்புதல்] போன்ற முக்கியமான விஷயங்களில், காலத்தை செலவிட்டதாலும், ஹதீதுகளையும், சட்டங்களையும் தொகுப்பதற்கு அவர்களில் யாருக்கும் சந்தர்ப்பம் கிடைக்க வில்லை. அது அவர்களுக்கு அவசியமானதாகவும் இருக்கவில்லை.

நாயகம் (ஸல்) அவர்களால் புகழப்பட்ட (ஸஹாபாக்களின்) முதல் காலம் கழித்த பிறகு, பின்னுல் வருகின்ற சமுதாயம் சீரழியாமல் தடுப்பதற்காகவும், தான்தோன்றித்தனமாக நடப்பதையும் பயந்த தாபிஈன்கள், நாயகம் (ஸல்) அவர்களின் ஹதீதுகளையும் ஸஹாபாக்களின் சொற்களையும் தொகுத்து ஏடுகளாக அமைத்தார்கள். அவர்களில் ஒரு சாரார், குர்ஆனிலிருந்தும், ஹதீதுகளிலிருந்தும் பல சட்டங்களை ஆய்வு செய்தார்கள். அவர்களில் மதிப்புக்குரிய 1) **இமாம் அபூஹனீபா (ரஹ்)** அவர்களும், 2) **இமாம் இத்ரீஸுஷ் ஷாபி (ரஹ்)** அவர்களும், 3) **இமாம் மாலிக் (ரஹ்)** அவர்களும், 4) **இமாம் அஹ்மது இபுனு ஹம்பல் (ரஹ்)** அவர்களும், சிறப்புக்குரியோராய் திகழ்ந்தார்கள். அவர்களின் இம் முயற்சி

www.EravurSYF.com

**நாயகம் (ஸல்) அவர்களின் அழகான வழிமுறைகள் பாரவும் உலகமெங்கிலும் பரவுவதற்கு உறுதுணையாக இருந்தன.**

**ஹதீது :-** நான் உங்களுக்கிடையே எவ்வளவு காலம் வாழ்ந்திருக்கப் போகிறேன், என்று நிச்சயமாக நான் அறிய மாட்டேன். எனவே நீங்கள் எனக்குப் பின் இந்த இருவரையும் பின்பற்றுங்கள் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறி, அபூபக்கர் (ரலி) அவர்கள், உமர் (ரலி) அவர்கள் ஆகியவர்களின் பக்கம் சாடை செய்தனர். (திர்மிதீ)

**ஹதீது :-** எனக்குப் பின்னால் உங்களில் வாழ்பவர்கள் அதிகமான கருத்து வேறுபாடுகளைக் காண்பீர்கள். அப்போது எனது நடைமுறையையும், நேர்வழி பெற்ற கலீபாக்களுடைய நடைமுறையையும் பின்பற்றுங்கள். (அபூதாவூத், திர்மிதீ)

வான்மறை குர்ஆனையும், அண்ணல் நபி [ஸல்] அவர்களின் போதனைகளையும் பின்பற்றுவது நம்மீது கடமை. அவைகள் இரண்டிலும் சட்டங்களை வெளிப்படையாக பெற முடிய வில்லை என்றால், குலஃபாயே-ராஷிதீன்களுடைய வழிமுறைகளை ஆராய்ந்து அவற்றைப் பின்பற்றுவது அவசியம். அவைகளின் அடிப்படையில் அமைக்கப் பெற்ற நான்கு மதுஹபுகளையும் பின்பற்றுவது அவசியத்திலும் அவசியமாகும்.

இதற்கு மாறாக, குர்ஆன் ஹதீதிலிருந்து மட்டுமே அனைத்து சட்டங்களையும் பெற முடியும் என்று கூறும் இக்குறை மதியாளர்களின் பின்னே சென்றால், குழப்பம் என்ற கரை காணாத கடலிலே மூழ்கித் தத்தளிக்க, நேரிடும் என்பதில் ஐயமில்லை.



## முஜ்தஹிதீன்களின் தகுதிகள்-

1) அறபி மொழியில் பாண்டித்தியம் பெற்றிருத்தல்.

2) குர்ஆன் மனப்பாடமாக (நுனி நாக்கில்) இருத்தல்.

3) காரீகளின் தரம், அவர்களின் கிராஅத் முறைகளையும் தெரிந்து இருத்தல்.

4) குர்ஆனில் குறிப்பானது, பொதுவானது, நாஸிக்ஃ, மன்ஸூக்ஃ. (மாற்றக்கூடிய-மாற்றப்பட்ட) வசனங்கள், முஹ்கமாத், முதஷாபிஹாத், (பொருள் தெளிவாக்கப் பட்ட, தெளிவாக்கப்படாத) வசனங்களை தெரிந்திருத்தல்.

5] ஹதீதுக்கலையின் அனைத்து வகைகளையும் தெரிந்திருத்தல்' [ஸஹீஹ், ழஈப், மௌலூஃ, மர்பூஃ, மௌகூஃப், முத்தஸில், முன்கதிஃ, முர்ஸல், முஸ்னத், ஆஹாத், முதவாதிர் இன்னும் பல]

6] பாவங்களை விட்டும் முழுமையாக தவிர்ந்திருத்தல்.

7] வாழ்வின் சகல துறைகளிலும் பேணுதலாக இருத்தல் [வேறுபல விதிகளும் உண்டு.]

மேலே குறிப்பிடப்பட்ட விதிகள் அனைத்தும் ஒன்றிணைந்து அமைந்திருக்கக்கூடிய ஒருவரே **முஜ்தஹித் முத்தலக்**, என்ற தகுதிக்குரியவராவார் என சட்டக்கலை கிதாபுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தனை தகுதிகள் இருந்து, இஜ்திஹாத் செய்பவர் ஆய்வில் தவறிவிட்டால்கூட அவருக்கு நன்மை உண்டு என்பது கீழ்க்கண்ட ஹதீதிலிருந்து தெளிவாகிறது.

**ஹதீது :-** தீர்ப்பளிப்பவர் முயற்சித்து (ஆய்வு செய்து) நல்லவை உருவானால், அவருக்கு இரண்டு கூலிகள் உள்ளன' (முயற்சிக்கு ஒன்று, அதனால் விளைந்த நற்செயலுக்கு ஒன்று) முயற்சித்து தீர்ப்பில் தவறிவிட்டால் அவருடைய முயற்சிக்கு ஒரு நன்மை உண்டு. (புகாரி, முஸ்லிம்)

www.EravurSYF.com

www.EravurSYF.com



## உங்கள் சிந்தனைக்கு!

மேன்மைக்குரிய இமாம் நவவி (ரஹ்) அவர்கள் இமாம் ராபிஃ (ரஹ்) அவர்கள், இமாம் பக்ருத்தீன் ராஜி (ரஹ்) அவர்கள், மற்றும் சிறப்புமிக்க பல உலமாக்களுக்கு இஜ்திஹாத் செய்யக்கூடிய தகுதி - திறமை இருந்தும் தாங்கள் முஜ்தஹிதுகள் என்று வாதிடவுமில்லை, உரிமை கொண்டாடவுமில்லை. மாறாக அவர்கள் அனைவருமே முகல்லிதுகளாகவே இருந்தார்கள்.

இந்த கண்ணியமிக்க உலமாக்களின் கருத்துக்களைப் புரியாத இந்த வழிகேடர்கள் தக்லீத் செய்யாமலேயே, தங்களுக்கும் இஜ்திஹாத் செய்ய தகுதி உண்டு என்று வாதிக்கிறார்கள். என்னே ஆச்சரியம்!!

குர்ஆன், ஹதீதுகளிலிருந்து சுயமாக ஆய்வு செய்து சட்டதிட்டங்களைக் கூற, இந்த குழப்பவாதிகளுக்கு என்ன தகுதி இருக்கிறது? உண்மையாகவே ஷரீஅத்துடைய இல்மு (அறிவு ஞானம்) இவர்களுக்கு கிடையாது. அவர்களின் அறிவு பேப்பர்களிலும், புத்தகங்களிலும் உள்ளவைகளை [illegible] கற்று, ஹதீதுகளின் ஓரங்களை மட்டும் பார்த்ததும், ஷரீஅத்தின் சகல கலைகளும் இவைகளிலேயே அமைந்து விட்டதாகக் கருதி இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்கள், இமாம் ஷாபி (ரஹ்) அவர்கள், இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள், இமாம் அஹமது இப்னு ஹம்பல் (ரஹ்) அவர்கள் ஆகியோர்கள் போன்று, எங்களுக்கும் ஆய்வு செய்ய திறமை உண்டு என்றும் நாங்களும் முஜ்தஹிதுகள் என்றும் அல்லாஹ்வின் அச்சமின்றி, வெட்கமின்றி இந்த வீணர்கள் கூறித்திரிகிறார்கள்.

எனவே மேற்கூறிய மதுஹபுகளுக்குரிய இமாம்களை (தக்லீத்) பின்பற்றி ஒழுகுவதில்தான் மக்களிடையே ஒற்றுமை ஏற்பட வாய்ப்பிருக்கிறது. மாறாக அவ்வாறு பின்பற்றாது தவிர்க்கப்படும் போது, விதர்ப்பங்கள், வீண் விவாதங்கள், அதன் காரணமாக சமுதாய மக்களிடையே வீண் குழப்பங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பாகிவிடுகிறது. ஆரோக்கியமான சிந்தனை உடையவர்கள் மட்டுமே இதனை ஏற்றுக் கொள்வார்கள்.



## இமாம்களைப் பின்பற்றிய மாமேதைகள்

### இமாம் ஷாபி (ரஹ்) அவர்களின் மதுஹபை பின்பற்றியவர்கள்:-

1) இபுனு ஹுஜைமா [ரஹ்] அவர்கள்
2) இமாம் நவவி [ரஹ்] அவர்கள்
3) இமாம் கஸ்ஸாலி [ரஹ்] அவர்கள்
4) இஜ்ஜதீன் இபுனு அப்துஸ்ஸலாம் [ரஹ்] அவர்கள்
5) இமாம் ராபிஃ [ரஹ்] அவர்கள்
6) இமாம் சுபுகி [ரஹ்] அவர்கள்
7) இமாம் ஜலாலுத்தீனுஸ் ஸுயூத்தி [ரஹ்] அவர்கள்
8) இமாம் இபுனு ஹஜர் [ரஹ்] அவர்கள்
9) இமாம் ரமலி [ரஹ்] அவர்கள்

குறிப்பு:- 1) ஹஜரத் இபுனு ஹுஜைமா [ரஹ்] அவர்கள் அக்காலத்தில் வாழ்ந்த உலமாக்களிடையே ஹதீது, பிக்ஹு கலைகளில் வல்லுனராக திகழ்ந்தார்கள். மேலும் ஷாபி மதுஹபில் பிரபல்யமானவர்கள் என்று இமாம் நவவி [ரஹ்] அவர்கள் கூறுகிறார்கள்.

2) இமாம் நவவி [ரஹ்] அவர்கள் முக்கியமான பல, நூற்களை தொகுத்து இருக்கிறார்கள். அவைகளில் குறிப்பிடத்தக்க சட்ட நூல்களாவன:- A) ரவ்ளா, B) மஜ்மூஃ, ஆகியவை. அவர்களின் ஹதீது நூற்களில் பிரபல்யமானவை. (A) ஷரஹ் முஸ்லிம் (B) அத்கார் நவவி, (C) ரியாழுஸ்ஸாலிஹீன் மற்றும் பல. அவர்களின் நூற்கள் சமுதாயத்தினரால் ஓதவும், அதன்படி அமல் செய்யவும், அங்கீகரிக்கப் பட்டவைகளாகும். அவர்களிடமிருந்து பல உலமாக்கள் ஹதீதுக் கலையைக் கற்றார்கள். ஹிஜ்ரி 631ல் பிறந்து 676ல் வபாத்தானார்கள். 45 ஆண்டுகளே வாழ்ந்த குறுகிய காலத்திலே முக்கியமான பல நூற்களை இயற்றியதிலிருந்தே அவர்களின் அந்தஸ்தை விளங்கிக் கொள்ளலாம்.

**இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்களின் மதுஹபை பின்பற்றியவர்கள்:-**

1) இமாம் முல்லா அலி காரி [ரஹ்] அவர்கள்
2) இமாம் ஹமலி [ரஹ்] அவர்கள்
3) இமாம் கைருத்தீன் ரமலி [ரஹ்] அவர்கள்
4) இமாம் நசஃபி [ரஹ்] அவர்கள்.

**இமாம் மாலிக் (ரஹ்) அவர்களின் மதுஹபை பின்பற்றியவர்கள்:**

1) குதுபுல் அக்பர் அபுல் ஹஸன் ஷாதுலி (ரஹ்) அவர்கள்
2) ஷெய்கு அபில் முர்ஸி (ரஹ்) அவர்கள்
3) ஷெய்கு இபுனு அதா இல்லாஹில் ஸ்கந்தரி (ரஹ்) அவர்கள்

**இமாம் ஹம்பலி (ரஹ்) அவர்களின் மதுஹபை பின்பற்றியவர்கள்:**

1) குதுபுல் அக்தாப் அஷ்ஷெய்கு அப்துல்காதிர் ஜெய்லானி (ரஹ்) அவர்கள்
2) பகுறுல் இஸ்லாம் அஷ்ஷெய்கு அப்துல்லாஹில் அன்சாரி (ரஹ்) அவர்கள்

மேற்கூறிய மரியாதைக்குரிய சிறப்புமிக்க அனைத்து உலமாக்களும் இன்னும் பலரும் மதுஹபை பின்புற்றியே வாழ்ந்தார்கள்.

ஹதீது: பெருங்கூட்டத்தினரைப் பின்பற்றுங்கள், எவன் தனித்தானோ, அவன் நரகத்திலும் தனித்து விடப் படுவான்.

ஹதீது: எவன் ஜமாஅத்தை விட்டு ஒரு ஜாண் பிரிந்தாலும் தன்னுடை கழுத்திலிருந்து இஸ்லாம் என்ற கயிற்றை கழற்றியவனுவான். (அகமது, அபூதாவூது)

ஆகவே முஃமின்களின் பெருங்கூட்டத்தைப் பின் பற்றுவது அவசியம் என்று தெரிந்து கொள்கிறோம்.

இதன் அடிப்படையிலேயே இன்றும் உலகின் பல பாகங் களிலுள்ள பெரும்பான்மையான முஸ்லிம்கள் மதுஹபைப் பின்பற்றியே வாழ்ந்து வருகிறுர்கள்.

வழிகெட்ட கூட்டத்தினருக்கு இவைகளை பார்க்ககூடிய கண்களோ, கேட்கக் கூடிய காதுகளோ இல்லை.

www.EravurSYF.com



**இமாம் ஷாபி (ரஹ்) அவர்களின், சொல்லும் அதன் விளக்கமும்:-**

இமாம் ஷாபி (ரஹ்) அவர்கள் கூறுகிறுர்கள்:-

''எனது மதுஹபுக்கு மாற்றமாக ஸஹீஹான ஹதீது களைக் கண்டால் என் சொல்லை வீசிவிட்டு ஸஹீஹான ஹதீதின் படி அமல் செய்யுங்கள். ஸஹீஹான ஹதீதுதான் எனது மதுஹபு.''

இந்தக் கூற்றை ஆதாரம் காட்டி இந்த வழிகெட்ட கூட்டத்தினர் தக்லீதை கைவிடும்படி வாதிக்கின்றுர்கள்.

இமாம் நவவி(ரஹ்) அவர்கள் 'மஜ்மூஃ' என்ற தனது நூலில் இமாம் ஷாபி(ரஹ்) அவர்களின் இந்தச் சொல்லை ஆராய்ந்து, தனது காலத்திற்கு முன்னுள்ளவர்களின் கருத்துக் களையும் விபரித்து, இமாம் ஷாபி (ரஹ்) அவர்களின் சகல நூற்களையும் படித்து ஆய்வு செய்தபின்

**''முஜ்தஹிது'' அந்தஸ்து உள்ளவர்களுக்கு மட்டுமே இமாம் ஷாபி(ரஹ்) அவர்களின் கூற்று பொருந்தும்''**

என்று கூறுகிறுர்கள்.

இமாம் ஷாபி(ரஹ்) அவர்கள், ஸஹீஹான ஹதீதுகளி லிருந்தே, பெரும்பாலான சட்டங்களை இயற்றியுள்ளார்கள். தன்னையும் அறியாமல் ஏதும் தவறு நேர்ந்து இருக்குமோ என்ற ஐயத்தினால்தான், மேலே சொன்ன வார்த்தையைக் கூறியுள்ளார்கள்.

**இமாம் ஷாபி(ரஹ்) அவர்களின் சட்டத்தை கைவிடுவதற் கான விதி:-**

இமாம் ஷாபி(ரஹ்) அவர்களின் கருத்துக்கு மாற்றமாக ஒரு ஹதீதை ஸஹீஹாக கண்டால்,

1) ஷாபி(ரஹ்) அவர்களுக்கு அந்த ஹதீது கிடைத்து இருக்காது.
2) கிடைத்து இருக்கும், ஆனுல் அவர்களிடத்தில் ஸஹீஹாக இருந்திருக்காது என்ற முடிவுக்கு இவர்கள் வரவேண்டும்,

**இமாம் ஷாபி (ரஹ்) அவர்கள் கையாண்ட ஹதீது, ஸஹீஹ் அல்ல, என்பது பிசகற தெரிந்து இருக்க வேண்டும்.** அந்த தகுதி ஏற்படுவதற்கு, இமாம் ஷாபி(ரஹ்) அவர்களின்



எல்லா கிதாபுகளையும், மேலும் அவர்கள் ஆதாரமாக பயன் படுத்திய கிதாபுகளையும், அது போன்ற இன்னும்பல கிதாபுகளை யும் ஆராய்ந்து இருக்க வேண்டும். இதுமிகச் சிரமமான காரிய மாக இருப்பதால், இத்தகைய தகுதி உடையவர்கள் மிக மிகக் குறைவு.

ஒரு ஹதீது குறை உள்ளதாக, மாற்றப்பட்டதாக (நாஸிக்ஃ) தனித்தன்மை வாய்ந்ததாக (தக்ஸீஸ்) வலிந் துரைப்பதாக இருத்தல்(தஅவீல்) போன்ற காரணங்களால், இமாம் ஷாபி(ரஹ்) அவர்கள், வெளிப்படையான சில ஹதீது களை ஆதாரமாக எடுக்காமலிருந்து இருக்கலாம்.

ஷெய்கு அபூ அம்ர் (ரஹ்) அவர்கள் கூறுகிறுர்கள்:-
இமாம் ஷாபி(ரஹ்) அவர்களின் ' 'ஸஹீஹான ஹதீதுதான் என்மதுஹபு, என்பதை ஆதாரமாக வைத்து தக்லீத் செய்வதை அலட்சியமாக கைவிட்டு ஹதீதுகளின் நேரடி கருத்தை மட்டும் வைத்து அமல் செய்வது சரியல்ல, ஏனெனில் ஒரு ஹதீதின் வெளிரங்கத்தை ஆதாரமாகக் கொண்டு சுயமாக அமல் செய்து விடலாம் என்பது எல்லா சட்ட மேதைகளுக்கும் சாத்தியமான தல்ல. உதாரணமாக;-

ஹதீது: இரத்தம் கொடுத்தவன், இரத்தம் எடுத்தவன் ஆகிய இருவருடைய, நோன்பும் முறிந்துவிடும்

இந்த ஹதீது ஸஹீஹாக இருந்த போதிலும், இமாம் ஷாபி(ரஹ்) அவர்கள் இந்த ஹதீது மன்ஸூஃ என்பதையும், அதற்கான காரணங்களையும், தங்களின் கருத்துக்கு ஆதாரங்களையும் அறிந்து இருந்ததால் நோன்பு **முறியாது**. என்று கூறுகிறுர்கள்.

இந்த ஹதீது பற்றி இமாம் ஷாபி(ரஹ்) அவர் களுக்குத் தெரிந்து இருந்த குறைகள் மற்றவர்களுக்குத் தெரியவில்லை.

இது சம்பந்தமான கருத்து வேறுபாடுகளின் விளக்கங் களை மஜ்மூஃ, போன்ற கிரந்தங்களில் நோன்பைப் பற்றிய பாடத்தில் பார்க்கலாம்.

இமாம் ஷாபி (ரஹ்) அவர்களின் ''ஸஹீஹான ஹதீது தான் என் மதுஹபு'' என்ற கருத்துன்படி செயல்பட்டவர் களுள், அபூவலீத், என்பவரும் ஒருவர், இவர் ஷாபி மதுஹபைப் பின்பற்றியவர். ஆனுல் நோன்பு சம்பந் தமான இந்த ஹதீது, 'ஸஹீஹ்' என்ற ஒரே காரணத்தினுல், நோன்பு முறியும் என்று அபூவலீத் சொல்கிறுர்கள். ஆனுல் இமாம் ஷாபி(ரஹ்) அவர்களுக்குத்



தெரிந்த, இந்த ஹதீதில் உள்ள அந்தரங்க குறைபாடுகள், அபூவலீத் போன்றவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. இதனுல் மற்ற உலமாக்கள் அபூவலீத் அவர்களின் கருத்தைக்கண்டனம் செய்துவிட்டனர்.

## வழிகேடர்களின் குற்றச்சாட்டும் தக்க பதிலும்

இவர்களின் தவறுன குற்றச்சாட்டுகளில் ஒன்றுதான், நல்லவை களை 'பித்அத்' என்று கூறுவது:-

ஹதீது: புதிய செயல்கள் (பித்அத்) ஏற்படுவதை உங்களுக்கு எச்சரிக்கை செய்கிறேன். புதியவை அனைத்தும் வழிகேடானது. (திர்மதி,இப்னு மாஜா)

இந்த ஹதீதை ஆதாரமாக வைத்து நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் இல்லாத நல்லவைகளையும் 'பித்அத்' என்று சொல்கிறுர்கள்
ஆனுல் மற்றொரு ஹதீதில்:

ஹதீது: யார் இஸ்லாத்தில் நல்ல வழிமுறையை (ஹஸனத்) உருவாக்குகிறுனே அதன் கூலி அவனுக்கு உண்டு. அதைக் கொண்டு அமல் செய்கிறவர்களுக்கும் உண்டு — முஸ்லிம்.

## அன்புக்குரியவர்களே! சிந்தியுங்கள்!!

அவர்கள் எடுத்துக் கூறும் மேலே கூறிய ஹதீதில் வரக்கூடிய 'குல்லு பித்அதின்' என்ற வார்த்தைக்குப் பின் ஒரு சிபத், போக்கப்பட்டிருக்கும். இதற்கு சான்றுக குர்ஆனில் சூரா கஹ்பில் ''குல்லசபீனத்தின்'' என்பதற்குப்பின் ''ஸாலிஹத்தின்'' என்ற 'சிபத்' போக்கப்பட்டிருப்பது போன்றுகும்.

இதே கருத்தின் அடிப்படையில்தான் ஹதீதில் வரக்கூடிய 'குல்லு பித்அதின்' என்பதற்கு குல்லு பித்அதின் **கபீஹதின்** ளாலத்துன் என்ற கருத்தைத்தான் கொள்ள வேண்டும் என்பதை நல்ல சிந்தனையுடன் உணர்ந்து கொள்ளுங்கள்.

www.EravurSYF.com

**குறிப்பு:-** (இந்நூவிளக்கத்தில் அரபி இலக்கணம் சம்பந்தப்பட்டிருப்பதால் நம்பிக்கையான ஆலிம்களை அணுகி விளக்கம் பெற்றுக்கொள்ளுங்கள்)

இக் குழப்பவாதிகள் கூறுவது போல, நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் செய்யாத ஒரு விஷயத்தைச் செய்வது வழிகேடு என்றால், இன்று நம்மிடமுள்ள புத்தக ரூபத்தில் இருக்கும் குர்ஆனைக் கோர்வை செய்ததும் வழிகேடு என்று ஆகிவிடும். ஆனால் **குர்ஆனை புத்தக வடிவில் எழுதாமல் விட்டு,** மற்ற வேத நூல்கள் அவரவர்களின் உம்மத்திடமிருந்து மறைந்ததுபோல், குர்ஆனும் மறைந்துவிடக் கூடாது என்ற நல்ல நோக்குடன் ஹஜரத் உமர் (ரலி) அவர்களின் ஆலோசனையின் பேரில் ஹஜரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் காலத்தில் தொகுக்க ஆரம்பம் செய்யப்பட்டது. ஆரம்பத்தில் ஹஜரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் 'நாயகம் (ஸல்) அவர்கள் செய்யாத ஒரு செயலையா ஏவுகிறீர்கள்'' என்று சம்மதிக்க மறுத்துவிட்டார்கள். மீண்டும் ஹஜரத் உமர் (ரலி) அவர்கள், குர்ஆனை மனப்பாடம் செய்த ஹாபிழ்களில் பலர் யுத்தத்தில் ஷஹீத் ஆகிவிட்டதால், குர்ஆனைக்கோர்வை செய்து வைப்பது மிக அவசியம் என்று வலியுறுத்திக் கூறியதினால் ஹஜரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் சம்மதித்தார்கள். அப்போது உமர் (ரலி) அவர்கள் ''எனது கல்பை இந்த விஷயத்தில் தெளிவாக்கியது போல் அபூபக்கர் (ரலி) அவர்களின் கல்பையும் தெளிவாக்கிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்'' என்று நன்றி செலுத்தினார்கள். அதன்பின் ஹஜரத் அபூபக்கர் (ரலி) அவர்கள், குர்ஆனைக் கோர்வைசெய்ய காரிகளையும், ஹாபிழ்களையும் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டு, பலவிதமான பொருட்களிலும் ஹாபிழ்களின் நெஞ்சங்களிலும் இருந்த குர்ஆன், இன்று நம் கையில் யாராலும் எவ்வித மாற்றமும் செய்ய முடியாதபடி எழுத்து வடிவில் நமக்கு கிடைத்திருப்பதை மறுக்க முடியாது. ஆரம்பத்தில் எழுத்துக்களின் மீது அடையாளமிடப்படாத நிலையிலிருந்த குர்ஆன், ஹஜ்ஜாஜ் இபுனு யூஸுபு அவர்களின் காலத்தில் முறையான அடையாளங்களிடப்பட்டு, இன்று பாமர மக்கள் கூட ஓதக்கூடிய முறையில் குர்ஆன் திகழ்கிறது.

**இது ஹஜரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் காலத்தில் நடந்த ஒரு நல்ல ''பித்அத்'' ஆகும்.**

www.EravurSYF.com



**குழப்பவாதிகள் தாங்களும் குழம்பி, மக்களையும் குழப்பிய இன்னுமொரு விஷயம் தராவீஹ் தொழுகை.**

அல் குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்: (விசுவாசிகளே!) உங்களுக்குள் யாதொரு விஷயத்தில் பிணக்கு ஏற்பட்டால், அதனை அல்லாஹ்விடமும் (அவனுடைய) தூதரிடமும் ஒப்படைத்துவிடுங்கள். (4 : 59)

இந்த ஆயத்தின் அடிப்படையில் இமாம்கள் தராவீஹ் தொழுகை விஷயத்தில் தெளிவான முடிவைப் பெற, குர்ஆனை ஆய்வு செய்தார்கள். ''தராவீஹ்'' உடைய விளக்கம் கிடைக்கப் பெறவில்லை. பிறகு நாயகம் (ஸல்) அவர்களின் ''அலைக்கும் பிஸுன்னத்தீ'' என்ற பொன்மொழியின் அடிப்படையில் ஹதீதுகளை ஆய்வு செய்தார்கள். அதிலும் அவர்களுக்குப் போதிய விளக்கம் காணப்படவில்லை. பின்னர் ''வஸுன்னத்தில் குலஃபாயிர் ராஷிதீன்'' என்ற பொன்மொழியின் அடிப்படையில் ஆய்வு செய்ததில் இரண்டாவது கலீபாவாகிய ஹஜரத் உமர் (ரழி) அவர்களின் காலத்தில், தராவீஹ் தொழுகை 20 ரக அத்துக்கள், இமாம் ஜமாஅத்தாக தொழப்பட்டு வந்ததைக் கண்டார்கள். மேலும் ஹஜரத் உமர் (ரழி) அவர்களைப் பின்பற்றி, கலீபாக்களாகிய ஹஜரத் உதுமான் (ரழி) அவர்கள், ஹஜரத் அலி (ரழி) அவர்கள், மற்றும் அனைத்து ஸஹாபாப் பெருமக்களும், ஏகமனதாக ஏற்று செயல்பட்டு வந்ததையும் கண்டார்கள்.

இந்த ஆய்வின் முடிவின் அடிப்படையிலேயே, தராவீஹ் 20 ரகஅத் என்பதாக மதிப்பிற்குரிய நான்கு இமாம்களும், தங்களுடைய மதுஹபுக்குரிய கிரந்தங்களில் குறிப்பிட்டுள்ளார்கள்.

உண்மைநிலை இவ்வாறு இருக்க, தராவீஹ் 8 ரகஅத் என்பதற்கு, குர்ஆன், ஹதீதிலிருந்து இவர்களுக்கு ஆதாரம் எங்கிருந்து கிடைத்தது?

இந்த குதர்க்க வாதிகள் தராவீஹ் 8 ரகஅத்துக்கள் என்பதற்கு, அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கும் 'ரமழானிலோ' ரமழான் அல்லாத காலத்திலோ 11 ரகஅத்துகளுக்கு அதிகமாக தொழுதது இல்லை என்ற அறிவிப்பை ஆதாரம் காட்டுகின்றனர்.

ஆனால் இந்த ரிவாயத்தில் **ரமழானிலோ, ரமழான் அல்லாத காலத்திலோ** என்று குறிப்பிட்டு இருப்பதிலிருந்தே இது ரமழான் மாதத்திற்கே உரித்தான தராவீஹ் தொழுகை சம்பந்தப்பட்டதல்ல என்பது இந்தக் குறை மதியாளர்களுக்கு விளங்கவில்லை.



**மேலும் இந்த ஹதீதை அறிவிக்கும் அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் ஹஜரத் உமர் (ரழி) அவர்கள் காலத்தில் வாழ்ந்திருந்தும், ஹஜரத் உமர் (ரழி) அவர்களின் செயலை ஏன் கண்டிக்கவில்லை.**

அவ்வாறு அவர்கள் கண்டிக்காமல் இருந்ததிலிருந்தே ஹஜரத் உமர் (ரழி) அவர்களின் செயலை இதயபூர்வமாக ஏற்றுக் கொண்டார்கள் என்பது நிருபணமாகிறது. இதே போல்தான் எந்த ஒரு ஸஹாபி கூட எதிர்க்கவில்லை.

மேலும் தராவீஹ் 20 ரகஅத்துகள் இதுகாலம் வரை கஃபாவிலும், மஸ்ஜிதுன்னபவியிலும் தொழவைக்கப்படுகிறது. **இது ஹஜரத் உமர் (ரழி) அவர்கள் செய்த நல்ல 'பித்அத்'**

இந்த வழிதவறிய கூட்டம், நாயகம் (ஸல்) அவர்கள், 8 ரகஅத்கள்தான் தொழுதார்கள் என்றும், ஹழரத் உமர் (ரழி) அவர்கள், நபி [ஸல்] அவர்களுக்கு மாற்றம் செய்தார்கள் என்றும் மனம் போன போக்கில் பிதற்றித் திரிகின்றனர்.

ஆனால் இப்போது இந்தக் கூட்டம் தானே குழம்பிப் போய், தராவீஹ் என்று ஒரு தொழுகை கிடையாது நாயகம் [ஸல்] அவர்கள் தொழுதது **இரவுத் தொழுகை** என்று கூறத் தொடங்கியுள்ளார்கள்,

1989-ம் வருடம் வரை தராவீஹ் 8 ரகஅத் என்று கூறியவர்களின் 1990-ன் கண்டுபிடிப்பு ''இரவுத் தொழுகை.''

**தராவீஹ் தொழுகைக்கும், தஹஜ்ஜுத் தொழுகைக்கும், இடையில் பிரித்துணர முடியாத வீணர்கள், குழப்பத்திற்கு மேல் குழம்பிப் போய் இருக்கிறார்கள்.**

**அன்புக்குரியவர்களே!**

இதுவரை நம் சமுதாயத்தில் ஊடுருவிய புல்லுருவிகளை பற்றி ஓரளவு தெளிவு படுத்தி விட்டோம். அவர்களைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள்.

இவர்கள் ஆரம்பத்தில் சமுதாயத்தில் ஏற்பட்டிருந்த சில கெட்ட பித்அத்களையும், அனுச்சாரங்களையும் கண்டித்து வந்ததாலும், தவ்ஹீதை போதிக்கிறோம் என்ற போர்வையில் செயல்பட்டு வந்ததாலும், அவர்களின் துர்நோக்கம் தெளிவில்லாமல் இருந்ததாலும், உலமாக்களில் பலர் இவர்களைப் பற்றி மௌனமாக இருந்துவிட்டார்கள்.

நாளடைவில் தங்களின் சுயரூபத்தைக் காட்ட ஆரம்பித்துவிட்டதனால் சமுதாயத்தில் ஏற்பட்ட குழப்பங்களையும்,



விதர்ப்பங்களையும் அறிவீர்கள். அவர்கள் இரண்டு மூன்று குர்ஆன் வசனங்களையும், ஹதீதுகளையும் ஓதிக் காட்டிவிட்டு, அதற்கு விளக்கம் கூறுகிறோம் என்று அவைகளுக்கு தங்கள் இஷ்டப்படி சுயமாக-தவறான விளக்கங்களை மணிக்கணக்கில் பேசி தாங்கள் கூறுவது அனைத்தும் குர்ஆனிலும், ஹதீதுகளிலும் உள்ளவைதான் என்ற மாயையை ஏற்படுத்தி வருகின்றனர்.

இந்த உண்மைகளை, நேர்மையான உலமாக்கள் எடுத்துக் கூறினால், எங்களுடன் விவாதத்திற்கு தயாரா? என்று முடிவு காண முடியாத ஒரு விஷயத்திற்கு அழைக்கிறார்கள். **ஸஹாபாக்களுடைய நடைமுறைகளை ஏற்றுக் கொள்ளாத - உமர் (ரழி) அவர்கள், உதுமான் (ரழி) அவர்களெல்லாம் தவறு செய்துவிட்டார்கள் என்று குறைகூறும் இந்த வீணர்களுடன் விவாதம் செய்து என்ன தீர்வு ஏற்பட்டுவிடப்போகிறது?**

இவர்களின் கவனம் அதிகமாக இளைஞர்களின் பக்கமே இருக்கும். ஏனெனில் அவர்கள்தான் சீக்கிரம் உணர்ச்சிவசப் படக்கூடியவர்கள். புதிதாக எந்த ஒரு விஷயம், இயக்கம் தோன்றினாலும் ஈர்க்கப்படுபவர்கள் அவர்களே. இதேபோன்றுதான், குர்ஆனுக்கும் ஹதீதுக்கும் ஏதோ புதிதாக விளக்கம் சொல்கிறார்கள் என்ற மாயையில் இந்தக் குழப்பவாதிகளின் பின்னாலும் சிலர் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

அன்பிற்குரிய இளைஞர்களே, பெரியோர்களே இந்தக் குழப்பவாதிகள் புதியவர்கள் அல்ல, 'அஹ்லே ஹதீஸ்' என்ற பழைய குழப்பவாதிகளின் புதிய சந்ததியினரே. அக்காலத்திலேயே அவர்கள் காலத்தைய உலமாக்கள் ஆணித்தரமான பதில்களைச் சொல்லி அவர்களை ஒடுக்கிவிட்டார்கள்.

அவர்கள் குதர்க்கம் செய்வதெல்லாம் சிறிய, சிறிய அமல்கள் விஷயத்தில்தான். மேலும் தொப்பி அணிவது, இருகைகளால் முஸாபஹா செய்வது போன்ற சமுதாயத்தில் உள்ள நல்ல கலாச்சாரங்களையும் மறுத்து, பெரியவர்களுக்கு மரியாதை கொடுக்கும் மனப்பக்குவத்தையும் இளைஞர்களின் மனதிலிருந்து எடுத்து வருகிறார்கள்.

இவைகளுக்கெல்லாம் விளக்கம் கொடுத்துக் கொண்டிருந்தால் முடிவு காண முடியாது.

யா அல்லாஹ்! இந்தக் குழப்பவாதிகளின் குழப்பங்களை விட்டும் எங்களையும், எங்கள் இளைய தலைமுறையினரையும் காப்பாற்றுவாயாக. ஆமீன்,

www.EravurSYF.com

'ரஹ்மத்' 10-ம் ஆண்டு சிறப்பு மலர் 1972

மத்ஹபுகள் பற்றி ஓர் ஆராய்ச்சி:

# இமாம்களிடையே ஏனிந்த வேறுபாடு?


மூலம்: ஷெய்குல் ஹதீஸ் முஹம்மத் ஜகரிய்யா சாஹிப் [மத்தலில்லுஹு]

நூல் : 'இக்திலாபுல் - அயிம்மா

தமிழில்: மௌலவி அ. கலீல்அஹ்மத் [கீரனூர்] ஜாமிஆ அன்வாருல் உலூம் திருச்சி.


இமாம்களிடையே ஏற்பட்ட கருத்துவேறுபாடு அவர்கள் காலத்தில்தான் தோன்றியதா? இல்லை, அதற்கு முன்பே இருந்து வந்ததா? இதுபற்றி முதலில் சற்று கவனிப்போம்.

அண்ணல் நபி (ஸல்) காலத்திலும், அதற்கடுத்து ஸஹாபாக்கள் தாபியீன்கள் காலத்திலும் இந்த வேறுபாடுகள் காணப்படத்தான் செய்கிறது. ஆனால் வெளிப்படையாக இந்த வேறுபாடுகள் காணப்படினும் அந்தரங்கத்தை ஆராயும் போது அப்படி எந்த வேறுபாடும் காணப்படவில்லை.

என்றாலும் பிற்காலத்தில் இமாம்களிடையே கருத்து வேறுபாடு தோன்றவும், அதிலிருந்து மத்ஹபுகள் பலதாக ஆகவும் இந்த வேறுபாடு காரணமாக அமைந்தது எனலாம்.

## முதற்கட்டம் அண்ணல் நபி (ஸல்)அவர்களின் காலத்திலே

அக்காலத்திலேயே கருத்து வேறுபாடுகள் காணப்படுவது உண்மைதான். ஆயினும், அதற்கு தகுந்த பல காரணங்கள் உண்டு. ''அக்காரணங்களால் இந்த வேறுபாடு கட்டாயம் ஏற்படத்தான் வேண்டும்; இதை நாம் எவ்வகையிலும் குறை கூற இயலாது'' என்பதை, காரணங்களை ஆராயும் போது நாம் விளங்கிக் கொள்ள முடியும். அவற்றில் முக்கியமானவற்றை நாம் பின்னால் கூறுகிறோம்.

நபியின்காலத்திலே, ஃபிக்ஹு மஸ்அலாக்களைத் தொகுத்துக் கூறும் நூற்கள் இருக்கவில்லை. சட்டங்கள் இது பர்ளு, இது வாஜிபு, இது சுன்னத்து என்று பகுத்து கூறப்படவும் இல்லை, அதற்குரிய அவசியமும் இருக்கவில்லை. தொழுக வேண்டும் என்று சட்டம் வந்தது. ஜிப்ரயீல் (அலை) தொழுது காண்பிக்க, நபி (ஸல்) அவர்கள் தொழுதார்கள். நபி (ஸல்) அவர்கள் தொழுது காண்பிக்க, ஸஹாபாக்களும் தொழுதார்கள் அவ்வளவுதான்.



வாஜிபு, சுன்னத்தைப் பற்றியோ; 'இதை விட்டால்', 'அதை விட்டால்' என்பது பற்றியோ கேள்வி எழுப்பவேண்டிய அவசியம் அதிகம் தோன்றவில்லை. தேவையின்றி அக் கேள்விகளைக் கேட்பதை மரியாதைக் குறைவெனவும், தவறெனவும் ஸஹாபாக்கள் கருதினார்கள்.

'வித்ரு தொழுவது சுன்னத்தா? வாஜிபா? எனக்கேட்ட ஒருவருக்கு-இப்னு உமர் (ரலி) அவர்கள், 'நாயகமும், அவர்களது தோழர்களும் விடாது தொழுது வந்தனர்' என்ற பதிலையே திரும்பத் திரும்பக் கூறினார்கள். ஏன்? இக்கேள்வி அவசியமற்ற ஒன்று; அவர்கள் தொழுதார்கள். நாமும் தொழுக வேண்டும், அவ்வளவுதானே.

உண்மையில் நடந்துவிட்ட ஒன்றைப் பற்றி நபியிடம் கேட்டு விளக்கம் பெற்றுக்கொள்வார்கள். நடக்காததைப் பற்றி, இப்படி நடந்தால், அப்படி நடந்தால் என்று அவர்கள் கேட்கமாட்டார்கள் என்பது மட்டுமல்ல, அப்படிக் கேட்பவர்களைப் பழித்தும் கூறியுள்ளார்கள். இப்போது கருத்து வேறுபாட்டுக்கான காரணங்கள் பற்றிக் கவனிப்போம்.

## காரணம் ஒன்று

கண் பார்வை இழந்த ஸஹாபி ஒருவருக்கு நாயகம் (ஸல்) வீட்டிலேயே தொழுதுகொள்ள அனுமதியளித்தார்கள். வேறொரு ஸஹாபி, அவரும் பார்வை இழந்தவர் தான். அவருக்கு நாயகமவர்கள், பள்ளியில்தான் தொழுக வேண்டுமென்று கூறிவிட்டார்கள்.

'பாங்கு சொன்னவருக்குத்தான் இகாமத் சொல்லும் உரிமை' என்றார்கள். அதே நேரத்தில்-'பிலால் பாங்கு சொன்னாலும், நீங்கள் இகாமத் சொல்லிக் கொள்ளலாம்' என அப்துல்லாஹ் இப்னு ஜைதுக்கு அனுமதியளித்தார்கள்.

இதுபோன்று பல மஸ்அலாக்கள், அவற்றில் ஹதீஸ்களிலேயே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன.

பார்வையற்ற இரண்டாமவரது இல்லம் பள்ளிக்கு அருகில் இருந்தது. அப்துல்லாஹ் இப்னு ஜைதுதான், பாங்கின் வாக்குகளை முதன் முதலில் கனவில் கண்டு நாயகம் அவர்களிடம் கூறியவர். இக்காரணங்களால் இரண்டாமவரைப் பள்ளியில் தொழுக வேண்டுமென்றும், இகாமத்துச் சொல்லிக் கொள்ளலாம் என்றும் கட்டளையிடப்பட்டது.

இக்காரணங்களைக் கூறுவதிலே,விளங்குவதிலே வேறுபாடு ஏற்படும்போது, மஸ்அலாக்களிலும் வேறுபாடு ஏற்பட்டு விடுகிறது.

www.EravurSYF.com



நபியின் சமூகம்—ஏழை, பணக்காரர், வாலிபர், வயோதிகர், தடைகள் உள்ளவர் - அற்றவர். ஆக, எல்லாத் தரத்தவரும் வருகின்றனர்; மஸ்அலா கேட்கின்றனர். மஸ்அலா தரத்திற்கேற்ப வேறுபடத்தானேசெய்யும்! நபியிடம் தான் நேரடியாகக் கேட்டதைத்தானே அவர் சொல்லுவார். அதைத்தானே சொல்லவும் வேண்டும்.

நோன்பு வைத்துக்கொண்டு மனைவியுடன் தொட்டுப் பழகலாம் என்றார்கள் ஒருவருக்கு. மற்றொருவருக்கு 'கூடாது' என்றார்கள். முந்தியவர், வயோதிகர். தளர்ச்சியடைந்தவர்; பிந்தியவர், வாலிபர், முந்தியவர் தான் கேட்டதையும், பிந்தியவர் தான் கேட்டதையும் சொல்லுவார்; மஸ்அலாவில் வேறுபாடு வரும்.

நிகழ்ச்சிகளின் போது இரு கூட்டமே இருந்திருக்கலாம். அவர்களில் ஒவ்வொரு கூட்டத்தாரும் தாம் காதால் கேட்டதை மற்றவர்களுக்கு உறுதியோடு சொல்வார்கள் வேறுபாட்டுடன்.

இந்நிகழ்ச்சிகளின் காலம், காரணம் ஆகியவற்றை ஆராய்ந்து முடிவெடுத்தனர் இமாம்கள். அப்போது ஆராய்ச்சி வேறுபாட்டால் இமாம்களிடையே வேறுபாடு ஏற்படவேண்டியது தவிர்க்க முடியாததாயிற்று.

## காரணம் இரண்டு, மூன்று

தனிச் சட்டத்தை பொதுச் சட்டமென்றோ, பொதுச் சட்டத்தை தனிச்சட்டம் என்றோ கருதிக்கொள்வது.

வீட்டுக்காரர்கள் அழுவதால், 'இறந்தவருக்கு அதாப் ஏற்படுகிறது என்று நாயகம் கூறியதை எல்லோருக்கும் இப்படித்தான், இது பொதுக்கூற்று என்று இப்னு உமர் (ரழி) கருதுகிறார்கள். ஆயிஷா (ரழி) அவர்கள் இது குறிப்பிட்ட எஹூதிப் பெண் சம்பந்தமாகக் கூறப்பட்டது என்று கருதுகிறார்கள்.

இதே போன்று,

'குத்பா' ஓதும்போது தஹிய்யதுல்மஸ்ஜித் தொழுகலாமா? என்பது ஒரு கேள்வி.

நாயகம் குத்பா ஓதும் போது ஒரு ஸஹாபி வருகிறார். நாயகமவர்கள், அவரை 'தஹிய்யதுல்-மஸ்ஜித் தொழுகும்படி கட்டளை இடுகிறார்கள். ஹனபி இமாம்கள் 'அந்த ஸஹாபியின் ஏழ்மையை மற்றவர்கள் காணட்டும்; அவருக்கு உதவட்டும்' என்ற நோக்கத்தில் நாயகம் கூறினார்கள் என்று கூறுகிறார்கள்.



எனவே, இது அவருக்கு மட்டும் கூறப்பட்ட தனிச்சட்டம், பொதுச்சட்டமல்ல என்று கருதுகிறார்கள். வேறு சில இமாம்கள் இதை பொதுச்சட்டம் என்று கருதுகிறார்கள்.

இந்தக் காரணங்களால் வேறுபாடு ஏற்படத்தான் செய்யுமென்பது பகிரங்க உண்மையாகும். பின் தோன்றிய இமாம்கள் காரணங்களை ஆராய்ந்து முடிவெடுத்தனர்.

## காரணம் நான்கு

ஞாபகசக்தி மிகுந்தவர்கள். குறைந்தவர்கள்.. ஆனாலும் விஷயத்தை விளங்கிக் கொள்வதிலே திறன் மிக்கவர்கள் இப்படி பலதரப்பட்டவர்கள் நாயகத்தின் (ஸல்) சமுகத்திலே கூடுகிறார்கள்.

ஒன்றைப்பார்த்து அதை பாடமிட்டு அப்படியே சொல்வதற்கும், அதைப்புரிந்து அந்தரங்கத்தை விளங்கிச் சொல்வதற்குமிடையே வேறுபாடு உண்டு என்பது தெளிவான விஷயம். முதலாமவர் கேட்டதை, பார்த்ததை அப்படியே சொல்வார். ஆனால், இரண்டாமவரோ அதை விளங்கி அதன் கருத்தை தெளிவாகக் கூறுவார்.

நாயகம் (ஸல்) தாங்கள் ஹஜ்ஜுக்கு சென்றபோது, ஹஜ்ஜுக்கும், உம்ராவுக்கும் சேர்த்து இஹ்ராம் கட்டினார்களா? அல்லது ஹஜ்ஜுக்கு மட்டும் கட்டினார்களா? நபியவர்கள், இஹ்ராம் கட்டும் போது 'அல்லாஹும்ம லெப்பைக் பிஹஜ்' என்று கூறக் கேட்டவர்கள், ஹஜ்ஜுக்கு மட்டும் கட்டினார்கள் என்று கூறுகிறார்கள். ஆனால் அதன்பின் நிகழ்ந்தவற்றைக் கண்டு விளங்கிய வேறு தோழர்கள் ஹஜ்ஜு, உம்ரா இரண்டுக்கும் சேர்த்துத்தான் இஹ்ராம் கட்டினார்கள் என்றும் கூறுகிறார்கள். உண்மையும் அதுதான்.

இதே போன்று, நபியவர்கள் தமது இஹ்ராமை எந்த இடத்தில் ஆரம்பித்தார்கள் என்பதிலுள்ள மாறுபட்ட ரிவாயத்துகளைக் காணும் போது 'இத்தனை மாறுபாடா! என்று நாமே திகைக்கிறோம்.

இப்னு அப்பாஸ் (ரலி) கூடவே இருந்தவர்கள்; நிலைமைகளை விளங்கியவர்கள்; அவர்கள் கூறுகிறார்கள், கூட்டமோ மிக அதிகம். எல்லோரும் ஒரே நேரத்தில் நாயகத்தைக் காண முடியாது. எனவே, யார் முதலில், 'லெப்பைக்' கூறக் கேட்டார்களோ அதுவே ஆரம்ப இடம் என்று கூறுகிறார்கள். உண்மையில் ஆரம்பம் 'துல்-ஹுலைபா' பள்ளிவாயிலில்தான்.

கருத்து வேறுபாட்டுக்கு இதுவும் ஒரு காரணம்:

www.EravurSYF.com

**காரணம் ஐந்து**

ஒரு செயல், நாடி-அப்படித் தான் செய்ய வேண்டுமென்று செய்யப்பட்டதா? அல்லது, சந்தர்ப்பவசத்தால் அப்படிச் செய்யப்பட்டதா?

நாயகம் அச்செயலைச் செய்தது உண்மை. ஆனால், நாடி-வேண்டுமென்று செய்தார்களா? இல்லையா என்பதில் கருத்து வேறுபாடு நிகழ்வதுண்டு.

உதாரணமாக 'அப்தஹ்' என்னுமிடத்தில் நபியவர்கள் தமது ஹஜ்ஜின் வழியில் தங்கினார்கள். இப்னு அப்பாஸ், ஆயிஷா (ரலி) போன்றவர்கள். இது சுன்னத்தல்ல - வழியிலே அந்த இடம் வந்தது; வசதியாக இருந்தது; தங்கினார்கள், அவ்வளவுதான் என்கிறார்கள். இப்னு உமர், அபூஹுரைரா (ரலி) போன்ற சில ஸஹாபிகள், இது சுன்னத்து-நாயகம் வேண்டுமென்றுதான் அங்கு தங்கினார்கள் என்று கூறுகிறார்கள்.

**காரணம் ஆறு**

சட்டத்திற்கு காரணம் கூறுவதில் வேறுபாடு ஏற்படுவதுண்டு. ஒரு காபிரின் ஜனாஸா வழியிற் சென்றது. நாயகம், அதைக் கண்டவுடன் எழுந்து நின்றார்கள் இதை எல்லோரும் ரிவாயத்து செய்கிறார்கள். ஆனால் ஒவ்வொருவரும் கூறும் காரணம் வெவ்வேறு.

அந்த ஜனாஸாவுடன் வந்த மலக்குகளுக்கு மரியாதை செய்யவே எழுந்தார்கள். இது ஒருவர் கூறும் காரணம். இக் காரணத்தின்படி ஜனாஸா, காபிருடையதோ, முஸ்லிமுடையதோ எழுந்து நிற்க வேண்டுமென விளங்குகிறது. ஏனெனில், எல்லா ஜனாஸாவுடனும் மலக்குகள் இருக்கத்தானே செய்வார்கள்.

வேறொருவர் சொல்லும் காரணம், முஃமின்கள் உட்கார்ந்திருக்க, அவர்களது தலைக்கு மேலே காபிரான ஒருவரது ஜனாஸா செல்ல வேண்டாம் என எழுந்து நின்றார்கள். இதிலிருந்து, காபிரின் ஜனாஸாவுக்கு மட்டுமே எழுந்து நிற்கவேண்டுமென விளங்குகிறது.

**காரணம் ஏழு**

வார்த்தைகளுக்கு அர்த்தம் கூறுவதிலே வந்த மாறுபாடு. ஒரு வார்த்தைக்கு அகராதி அர்த்தம் வேறாகவும், புழக்கத்தில் கூறப்படும் அர்த்தம் வேறாகவும் இருக்கலாம். நபி கூறிய

www.EravurSYF.com



வார்த்தைக்கு ஒருவர் கொண்ட அர்த்தம் ஒன்று. மற்றொருவர் கொண்ட அர்த்தம் வேறு. இதனால் வேறுபாடு விளைகிறது.

'ஒளு' என்றால் அரபி அகராதியிலே 'தூய்மையாக்குதல்' என்று அர்த்தம். ஷரீஅத் அதை உபயோகிக்கும்போது, குறிப்பிட்ட உறுப்புகளை, குறிப்பிட்ட முறையிலே கழுவுவதென்று பொருள் கொள்ளப்படுகிறது.

நாயகமவர்கள், சாப்பிடும் முன்னும், சாப்பிட்ட பின்பும் 'ஒளு' செய்துகொள்ளுதல் 'பரகத்' ஏற்படக் காரணமாகும் என்றார்கள். இதே போன்று, சமைக்கப்பட்ட பொருள்களை நீங்கள் உண்டால், 'ஒளு' செய்து கொள்ளுங்கள் என்றும் கூறியுள்ளார்கள்

இப்போது, 'ஒளு' என்று கூறப்பட்டதற்கு அகராதி அர்த்தம் கொள்வதா? ஷரீஅத்தில் கூறப்பட்ட அர்த்தம் கொள்வதா? ஒருவர் இந்த அர்த்தம்; மற்றொருவர், அந்த அர்த்தம் கொள்கிறார். இங்கு வருகிறது வேறுபாடு.

**காரணம் எட்டு**

நபியவர்கள் சொன்ன ஒரு விஷயத்தை, கட்டாயம் செய்தே ஆகவேண்டும் என்ற வகையில் சொன்னதாய்ச் சிலரும், செய்தால் நல்லது என்ற தோரணையில் அருளியதாகச் சிலரும், செய்வது. ஜாயிஸ், கூடும் என்ற வகையில் சொன்னதாய் வேறு சிலரும் விளங்குவதாலும் வேறுபாடு ஏற்பட்டுவிடுகிறது.

உதாரணமாக, ஒளுவிலே, மூக்குக்கு நீர் செலுத்துவது, தூங்கி எழுந்தவுடன் ஒளு செய்யுமுன்பு, பாத்திரத்தில் கையை உள்ளே விடாமல், வேறு சிறு பாத்திரத்தில் தண்ணீர் எடுத்துக் கழுவிக்கொண்டு பிறகு வேண்டுமானால் உள்ளே விடுவது. சிலர், இதைக் கடமை என்கிறார்கள். சிலர், இதை, சுன்னத் என்கிறார்கள்.

தொழுகையில், நிலைகள் மாற்றத்தின்போது கூறப்படும் தக்பீர்கள் விஷயத்திலும், ருகூஃ, ஸுஜூதிலே 'பூரண நிம்மதி' இருக்க வேண்டும். அவசர அவசரமாக செய்துவிட்டால், அது நிறைவேறாது என்ற விஷயத்திலும் ஏற்பட்டுள்ள வேறுபாடு இவ்வகையைச் சார்ந்ததேயாகும்.

**காரணம் ஒன்பது**

மனத் தெளிவு ஏற்பட நாயகம் கூறியதை கடமை என்று வலியுறுத்திக் கூறப்பட்டதென சிலர் கருதிவிடுவதால் கருத்து வேறுபாடு ஏற்படுகிறது.



கரண்டைக்கு கீழ் தொங்கும் ஆடையுடன் தொழுத ஒருவரை, நாயகமவர்கள் ஒளுவைத் திரும்பச் செய்யும்படியும், தொழுகையைத் திருப்பித் தொழுகும்படியும் கூறினார்கள். இது இதுபோன்று இன்னும் பல நிகழ்ச்சிகள்.

மற்ற ரிவாயத்துகளை முன்வைத்து ஆராயும்போது இது கடமையல்ல, மனத்தெளிவுக்காக கூறப்பட்டது என்கிறார் சிலர். வேறு சிலரோ, இதைக் கடமை என்று கருதுகிறார்கள்.

**காரணம் பத்து**

நாயகமவர்கள், அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட நபியாக இருந்தார்கள். அதே நேரத்தில் உம்மத்துகளின் உளவியாதி போக்கும் ஆசானாகவும், குருவாயும்; உடல் வியாதி போக்கும் அன்புகொண்ட வைத்திய வல்லுனராகவும் இருந்தார்கள்.

சில சமயங்களில் அன்பு மிகுதியால் சிலதைக் கூறினார்கள். சில சமயம் கண்டிப்புக்காக சிலதைக் கட்டளையிட்டார்கள். அன்பால் கூறப்பட்டதைக் கடமை எனவும், கண்டிப்புக்கெனக் கூறப்பட்டதை அன்பால் கூறியதெனவும் சிலர் கருதிவிடுவதாலும் வேறுபாடு ஏற்பட்டு விடுவதுண்டு.

'இஸ்திஹாளா' (வியாதியால் மாதவிடாய் போன்று பெண்களுக்கு ரத்தப் பெருக்கெடுத்தல்) உள்ள பெண்ணுக்கு நாயகமவர்கள், ளுஹர், அஸர் ஆகிய இரண்டு தொழுகைக்கும் சேர்த்து ஒரு தடவை குளிக்கவும், மஃரிபு, இஷாவுக்கு சேர்த்து ஒரு தடவை குளிக்கவும் பிறகு தொழுகவும் கூறினார்கள்.

சிலர், இதை மார்க்கக் கடமை (பர்ளு' என்று கூறுகிறார்கள். வேறு சிலரோ, இது உடல் நலத்திற்காகக் கூறப்பட்டது; செய்தால் நல்லது. கடமையல்ல என்று கூறுகிறார்கள்.

பத்துக் காரணங்களை இப்போது நாம் கூறிவிட்டோம். காரணங்கள் அனைத்தையும் இந்தப் பத்திலே அடக்கிவிட முடியாதென்பது தெளிவு. காரணங்களில் முக்கியமானவற்றை மட்டும் நாம் இங்கு கூறியுள்ளோம். இப்படிப்பட்ட காரணங்களால் வேறுபாடு கட்டாயம் ஏற்படும் என்பதை விளக்குவதே நமது நோக்கம்.

**ஒரு பெரிய சந்தேகமும் அதற்கு நிவர்த்தியும்**

உம்மத்தின் போதனைக்கென்றே அனுப்பப்பட்ட நபியவர்கள், இப்படிப்பட்ட ஐயங்களுக்கெல்லாம் அறவே இடமில்லாமல் போதித்திருக்க வேண்டும். எங்கெங்கு ஐயங்கள் பிறக்கின்றனவோ அல்லது பிறக்க இடமிருக்கிறதோ, அங்கேயே

www.EravurSYF.com



அவைகளைக் களைந்து 'இது கடமை, இது கடமையல்ல, இது பொதுச் சட்டம், இது தனிச் சட்டம், இந்த வார்த்தைக்கு அகராதி அர்த்தம், இந்த வார்த்தைக்கு மார்க்கப் பழக்க அர்த்தம்' என்று கூறி தெளிவுபடுத்தியிருக்கவேண்டும். அப்படிச் செய்திருந்தால்,இந்த ஐயங்கள்,வேறுபாட்டுக்கானகாரணங்கள் ஏன் பிறக்கப்போகின்றன? நாயகம் (ஸல்) ஏன் அப்படிச்செய்யவில்லை? இப்படியொரு சந்தேகம் பிறக்கிறதல்லவா?

இந்த சந்தேகம் மார்க்கக் கட்டளைகளையும், அனுஷ்டானங்களையும் ஆழ்ந்து கவனிக்காததாலேயே ஏற்படுகிறது.

'இஃதிகாதிய்யாத்' எனப்பட்ட கொள்கை ரீதியில் உள்ளவற்றைத் தவிர மற்றவற்றில் 'ஒரே நிர்ணயம்' 'ஒரே வரம்பு' என்று ஏற்படுத்திவிடவில்லை. ஒரே விஷயத்தில் சில மாறுதல்கள் ஏற்பட இடம் வைத்துள்ளது என்றால், அது உம்மத்தை அதிக சிரமத்திற்குட்படுத்தக் கூடாது என்பதற்கேயாகும். இது, சிறிது சிந்தித்தாலும் தெளிவாக விளங்கும். 'ஒரே வரம்பு', வேறு வகையில் செய்தல், முற்றிலும் கூடாது என்று ஏற்படுத்தி கட்டுப்படுத்தாததால்தான் சில சமயங்களில், வித்தியாசமாக சிலவற்றை செய்துவிட்டாலுங்கூட நன்மை பெறத் தக்கோராய் அமைந்து விடுகிறோம்.

மனித அறிவு பூரணமாக அறிந்து கொள்ள முடியாத அடிப்படைக் கொள்கைகளை மார்க்கம் வரையறுத்துக் கூறிவிட்டது. மற்றவைகளில் இரு பக்கத்துக்கும் இடம் வைக்கப்பட்டுள்ளது. இதுவே உம்மத்துக்கு 'ரஹ்மத்' எனக் கூறப்பட்டதுமாகும்.

'முஅத்தா' எனும் ஹதீஸ் நூலை இமாம் மாலிக் (ரஹ்) தொகுத்த போது, ஹாரூன்ரஷீத், இமாம் அவர்களிடம் 'நீங்கள் இதனைக் கஃபாவில் தொங்கவிட்டு, மக்கள் அனைவரும் இதன்படி ஒரே முறையில் அமல்படுத்த வேண்டும் எனக் கூறுங்கள்' என்றுவேண்டினார். ஆனால், இமாம் அவர்கள் சம்மதிக்க வில்லை. இமாம் அவர்கள் 'ஸஹாபாக்களிடையே வேறுபாடு இருந்து வந்துள்ளது. அவர்களில் ஒருசாரார், மறுசாரார் செய்வதற்கு சிறிது மாற்றமாக செய்தாலும், அவர்கள் அனைவரும் நேர்மையிலேயே இருந்தார்கள்; யாரும் தவறு செய்யவில்லை அவர்களைப் பின்பற்றி சில மாற்றங்களுடன் அமல் செய்பவர்களும் அப்படியே' என்று கூறினார்கள்.

நபியின் முன்னிலையிலேயே இப்படிப்பட்டகருத்து வேறுபாடு சில விஷயங்களில் ஏற்பட்டுள்ளது. இரண்டு கருத்துகளையும் நபியவர்கள் 'சரி' யென்றே கூறியுள்ளார்கள். எனவே,

www.EravurSYF.com

இந்த வேறுபாடு வெறுக்கத்தக்க வேருடன் களையவேண்டிய ஒன்றல்ல. எனவேதான் அரசரின் ஆதரவோடு வேறுபாட்டைக் களைந்து விட, இமாம் மாலிக் (ரஹ்) அவர்களுக்கு வழியிருந்தும் களையவில்லை; அப்படியே விட்டு விட்டார்கள். அரசர் மன்சூரும், இமாம் அவர்களிடம் இப்படிச் செய்யும்படிக் கூறிய போது இமாம் அவர்கள் ஒப்பவில்லை என்றால் காரணம் இதுதான்.

மஸ் அலாக்களில் சிக்கல் ஏற்படும் போது வேறொரு மதுஹபின் அடிப்படையில் தீர்ப்புக் கூறி - ஃபத்வா கொடுத்து சிக்கலை விடுவிக்கிறோமே, அந்த மதுஹபுகள் இல்லாமலிருந்தால் இது முடியுமா!? இந்தக் கருத்து வேறுபாட்டால் இன்னும் ஆயிரமாயிரம் பலன்களுண்டு.

அல்லாமா ஷஃரானீ (ரஹ்) அவர்கள் 'அல்மீ ஜானில்' இதுபற்றித் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள்:-

''அவர்களிடையே ஏற்பட்ட வேறுபாடு உம்மத்துக்கு 'ரஹ்மத்' அருள்பாலிப்பதேயாகும். அல்லாஹ் நாடியிருந்தால், தீனின் அடிப்படையில் 'அகாயி'தில் வேறுபாடு கொள்வதை ஹராமாக்கியது போல் இதிலும் ஹராமாக்கியிருக்கலாம்.''

அலசி ஆராய்ந்த பின்னரே நான் கூறுகிறேன். இமாம்களின் மீதுகொண்ட வெறும் நல்லெண்ணத்தால் மட்டும் நான் கூறிவிடவில்லை. மேலும், நான் எழுதியுள்ள **அல்மன்ஹஜுல் முபீன்'** என்ற கிதாபைப் பாருங்கள். அதில், இமாம்கள், தாம் கூறிய மஸ்அலாக்களுக்கு ஆதாரமாய்க் கொண்ட ரிவாயத்துகளை ஒன்று திரட்டித் தந்துள்ளேன். அப்படி திரட்டிய பின் தான், நான் இந்த முடிவுக்கு வந்தேன். இமாம்கள் அனைவருமே நேர்வழியில்தான் இருக்கிறார்கள். நபியின் கூற்றுக்களை ஆதாரமாகக் கொண்டே அனைத்தையும் கூறுகிறார்கள். சிலர் அனுமதியளிக்கப்பட்ட இல்குவான்வற்றையும் எடுத்துக் கொண்டுள்ளனர்.

இவ்வுண்மையை, ஏதாவதொரு பரிபூரணமான ஷெய்கிடம் அமர்ந்து தெளிவு பெற்று, அடையப் பெறாதவரை புரிந்து கொள்வது சிரமம்.

நான் கூறவில்லை, இப்னு அரபி (ரஹ்) அவர்கள் 'புதூஹாதெ - மக்கிய்யா'வில் கூறுகிறார்கள், 'மனிதன் ஒரு மதுஹபை அடியொற்றி நடந்து-எல்லையை அடையும்போது-விரிந்து பரந்த கடல் ஒன்றை அடைகிறான்; அங்கே, அனைத்து இமாம்களையும் காணுகிறான்; அத்தனை பேருமே 'ஹிதாயத்'திலே -நேர்வழியிலே இருப்பதை உணர்கிறான்!



எனவே, இந்த வேறுபாடு வெளிரங்க வேறுபாடேயன்றி அந்தரங்கத்தில் அப்படியொன்றுமில்லை என்பதை உணர வேண்டும். ரிவாயத்துகளில் மேற்கூறிய காரணங்களால் ஏற்பட்ட வேறுபாடே இமாம்களிடையே ஏற்பட்ட வேறுபாட்டுக்குக் காரணம். இந்த வேறுபாடு ஏற்பட்டு விடாமல் நபியவர்கள் கூறியிருந்தால், பிறகும் வேறுபாடு வரத்தான் செய்யும். எல்லோருடைய விளக்கமும் அறிவும் ஒரே சீராக இருப்பதில்லை. வேறுபாடு வேண்டாம் எனக் கூறப்பட்டு, பிறகு வேறுபாடு தோன்றினால் அது வேதனைக்குக் காரணமாகி விடும். எனவே தான் வேறுபாடு வேருடன் களையப்படாது கொஞ்சம் விட்டு வைக்கப்பட்டுள்ளது. இதை, நாம் உம்மத்துக்கு வாய்த்த "ரஹ்மத்" என்று கூறுகிறோம்.

நன்றி: ரஹ்மத்
பத்தாம் ஆண்டு மலர் 1972

www.EravurSYF.com




www.EravurSYF.com